

# என்னப்பா... இன்னும் வெளிக்கிட்டு முடியேல்லையோ..?

சந்திரவதனா

மனஓசை

# என்னப்பா... இன்னும் வெளிக்கிட்டு முடியேல்லையோ..?

## பெண் மனசு

## சந்திரவதனா

## கதைகள்

மனஓசை

# Ennappa... Innum Velikkiddu Mudiyellaiyo..?

Penn Manasu

Stories

**Chandravathanaa Selvakumaran**

© November 2024, Manaosai, Germany
© Chandravathanaa Selvakumaran
Language: Tamil
Compilation: Manaosai
Published by Manaosai, Germany



*ஒரு எழுத்து எங்காவது ஒரு மூலையில் இருக்கும் ஒருவரையாவது அசைக்குமாயின் அதுவே அந்த எழுத்துக்குக் கிடைத்த பெரு வெற்றியாகும்.*

*அப்படி ஒருவரையல்ல பலரையும் அசைத்த எனது எழுத்துக்களிலிருந்து ஐந்தைத் தேர்ந்தெடுத்து இங்கு தொகுத்துள்ளேன்.*

*இவை 2001-2002 காலப் பகுதியில் 'பெண் மனசு' என்ற தலைப்பில் ஐபிசி தமிழ் வானொலியில் ஒலித்தவை. பாரிஸ் ஈழமுரசிலும் சக்தி பெண்கள் இதழிலும் பிரசுரமானவை. மீண்டும் மீண்டுமாய் வேறு பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் மறுபிரசுரமும் வானொலிகளில் மறுஒலிபரப்பும் செய்யப் பெற்றவை.*

*இவை அப்படி ஒலித்த, பிரசுரமான அந்தக் காலகட்டத்தில் "எங்கள் வீட்டுக் கதையை அப்படியே எழுதியிருக்கிறீங்கள்... எங்கள் வீட்டுக் கதை எப்படி உங்களுக்குத் தெரிய வந்தது..? எங்கள் வீட்டுக்குள் எட்டிப் பார்த்தீங்களா..?" என்றெல்லாம் என்னைக் கேட்டவர்கள் பெண்கள் மட்டுமல்ல. ஆண்களும் தான்.*

*படித்துப் பாருங்கள். ஒருவேளை உங்களுக்கும் பிடிக்கலாம். ஏன், உங்கள் வீட்டுக் கதையாகக் கூட இருக்கலாம்.*

**சந்திரவதனா**

# உள்ளடக்கம்


1. *என்னப்பா... இன்னும் வெளிக்கிட்டு முடியேல்லையோ ............ 05*
2. *கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா... 11*
3. *எனக்குத் தெரியும் ............ 18*
4. *அப்ப... பிரச்சனை ............ 25*
5. *ஏன் தான் பெண்ணாய் ............ 29*

# என்னப்பா... இன்னும் வெளிக்கிட்டு முடியேல்லையோ?

*எனக்கு வாற கோவத்துக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேல்லை. நான் பாத்ரூமுக்குள்ளை போய் தலையிலை சீப்பை வைக்குது வைக்க முன்னமே திரும்பவும் இந்த மனுசன் கத்துது, "என்னப்பா இன்னும் வெளிக்கிட்டு முடியேல்லையோ?" எண்டு.*

*என்னெண்டு முடியிறது? காலைமை எழும்பி, வீட்டை ஒரு நிலைப்படுத்தி, அவசரமாய் சமைச்சு, அதுக்கிடையிலை சின்னச் சின்னதா வீட்டிலை உள்ள மற்ற வேலையளைப் பார்த்து, அதோடை சமையலையும் முடிச்சு இந்த மனுசனுக்கு சாப்பாடும் குடுத்திட்டன்.*

*மனுசன் நித்திரையாலை எழும்பி படுக்கையைக் கூட விரிக்காமல் வந்து, இருந்து நான் போட்டுக் குடுத்த கோப்பியைக் குடிச்சிட்டு, நான் கீழை போய் தபால் பெட்டிக்குள்ளை இருந்து எடுத்துக் கொண்டு வந்த பேப்பரை வைச்சு நீட்டிலை வாசிச்சுக் கொண்டு இருந்திச்சு. நான்*

*பம்பரமாய் சுழண்டனே! ஒரு உதவி செய்வம் எண்டில்லை. சரி உதவத்தான் முடியேல்லை. உபத்திரமாவது தராமல் இருந்துதே!*

*இருந்து கொண்டு "இஞ்சரும், அந்தக் கண்ணாடியை எடுத்துத் தாரும். இஞ்சரும், இந்தக் கோப்பி கொஞ்சம் ஆறிப்போட்டுது. புதுசா ஒண்டு போட்டுத் தாரும்..." எண்டு தொல்லை வேறை.*

*அது மட்டுமே "எங்கையப்பா, அண்டைக் கொரு என்வெலப் தந்தனே! அதையொருக்கால் தாரும்."*

*ம்... தானே வைக்கலாம் தானே. கொண்டு வந்ததை என்னட்டைத் தாறது. பிறகு "எங்கையப்பா அது?" எண்டுறது. இதெல்லாம் நல்ல புத்தி சாதுரியமான வேலையள் எண்டு மட்டும் எனக்குத் தெரியாதே! கதிரைக்குள்ளை இருந்து கொண்டு காரியம் சாதிக்கிற தன்மையள்.*

*சரி, பேப்பரை வாசிச்சு முடிச்சிட்டு பாத்ரூமுக் குள்ளை போன மனுசன் சேவ் பண்ணுறன், அது இது எண்டு சொல்லி ஒரு மணித்தியாலமாய் வெளிலை வரேல்லை.*

*அதுக்குள்ளை நான் பிள்ளையளின்ரை வேலையளை ஓடி ஓடி முடிச்சிட்டன். அதுகளும் எங்கை..! அப்பா கதிரைக்குள்ளையும் சோபாவுக் குள்ளையும் இருக்க அம்மாதானே வேலையெல்லாம் செய்யிறா. அப்பிடியெண்டால் வேலையெல்லாம் அம்மாக்குத்தான் சொந்தம் எண்டு நினைக்குதுகள்.*

*அல்லது அம்மா வேலை செய்யிற மெஷின் எண்டு நினைக்குதுகளோ!*

*மனுசன் குளிச்சிட்டு வெளியிலை வருறதுக்கு முன்னமே சாப்பாட்டை ரெடியா மேசையிலை வைச்சிட்டன். மனுசன் ஏதோ நான் சமைக்கிறதுக் கெண்டே பிறந்தவள் எண்டு நினைச்சுதோ என்னவோ, ´நல்லாயிருக்கப்பா´ எண்டு ஒரு வார்த்தை பேசேல்லை. வேறை ஏதோ எனக்குத் தேவையில்லாத கதையளைச் சொல்லுறதும் "நாளைக்கு அந்த வேலையைச் செய். அங்கை அப்பொயிண்ட்மெண்ட் எடுத்து வை..." எண்டு எனக்கு கட்டளைகள் இடுவதுமாய் இருந்திச்சு.*

*எனக்கு பயங்கர எரிச்சல் மனசுக்குள்ளை. என்ரை எரிச்சலை இந்த மனுசனுக்குக் காட்டி ஏதும் பிரயோசனமிருக்கோ எண்டு நினைச்சுக் கொண்டு மனுசன் சாப்பிட்டு முடிச்ச கையோடை தேத்தண்ணி யைப் போட்டுக் குடுத்தன்.*

*தேத்தண்ணியைக் குடிச்சுக் கொண்டே மனுசன் தொடங்கீட்டுது. "என்னப்பா, நீ இன்னும் இன்னும் வெளிக்கிட்டு முடியேல்லையோ?" எண்டு.*

*எனக்குக் கோவந்தான் வந்துது. என்னெண்டு வெளிக்கிடுறது! கொஞ்சம் கூட ஒத்தாசை செய்யாமல், சாப்பிட்டு முடிய சாப்பாட்டைக் கூட மேசையிலை இருந்து எடுத்து வைக்காமல்... போய் தொலைக்காட்சிக்கு முன்னாலை இருந்து கொண்டு..*

*எனக்கு வந்த கோவத்துக்கு"ஏனப்பா, இஞ்சை*

வாங்கோ. இதுகளை நீங்கள் எடுத்து வைச்சீங்க ளெண்டால்... நான் ´டக்´ கெண்டு வெளிக்கிட் டிடுவன் தானே!" எண்டு சொல்லோணும் போலை இருந்திச்சு.

ம்... இப்ப சொல்லப் போய், அதுவும் வெளிக்கிடுற நேரம், பிறகு மனுசன் "நான் என்ன உன்னைப் போலை சும்மா வீட்டிலையே இருக்கிறன். வேலைக்குப் போற மனுசனை ஒரு நேரம் ஆறுதலா இருக்க விட மாட்டாய்" எண்டு தொடங்கீடும்.

பிறகு எனக்கு 'மூட் அவுட் ஆகி... ஏன் பிரச்சனையை எண்டிட்டு வாயை மூடிக் கொண்டு எல்லாத்தையும் எடுத்து வைச்சன்.

மனுசன் ஆற அமர இருந்து தேத்தண்ணியைக் குடிச்சுக் கொண்டு, தொலைக்காட்சியை ரசிச்சுக் கொண்டு இருந்திச்சு. எனக்கு குளிச்சுப் போட்டு வரவும் வேர்த்துக் கொட்டிச்சு.

ஒரு மாதிரி சாறியை உடுத்திட்டு வந்து தலையை இழுக்கிறதுக்கு சீப்பை தலையிலை வைக்கவே மனுசன் திரும்பத் தொடங்கீட்டுது. "என்னப்பா, நீ இன்னும் வெளிக்கிட்டு முடியேல்லையோ?" எண்டு

நல்லாத் திருப்பிக் குடுக்கோணும் போலை எனக்குக் கோவம் பொத்துக் கொண்டு வருது.

ம்... குடுத்தென்ன! மனுசன் பிறகு இன்னும்

*சிடுசிடுக்கும்.*

*சரி, ஒரு மாதிரி வெளிக்கிட்டாச்சு. மனுசன் இப்ப எழும்பிப் போய், வெளிக் கதவையும் திறந்து வைச்சுக் கொண்டு நிண்டு "நீ வெளிக்கிட்டு வாறதுக்கிடையிலை அங்கை புரோக்கிராம் முடிஞ்சு எல்லாரும் வீட்டையும் போடுவாங்கள். ஏன் தான் இந்தப் பொம்பிளையள் வெளிக்கிடுறதுக்கு இவ்வளவு நேரமோ..." எண்டு என்னை மட்டுமில்லாமல் பொம்பிளை வர்க்கத்தையே பேசிக் கொண்டு நிக்குது.*

*நானும் ஏதும் சொல்லோணும் எண்டு துடிக்கிற நாக்கை அப்படியே மடக்கி, வாயை இறுக்கி மூடிப் போட்டன்.*

*வெளியிலை போறதுக்கு முன்னம் வீட்டிலை எல்லாம் சரியா இருக்கோ எண்டு பார்த்தன். அதையேன் பேசுவான். வழக்கம் போலை லைற் எரியுது. தொலைக்காட்சி போட்ட படியே இருக்குது. நிற்பாட்டேல்லை. அது மட்டுமே..! மனுசன் வாசிச்ச பேப்பர் மேசையிலை விரிச்ச படி இருக்கு. குடிச்ச கோப்பை கதிரைக்குப் பக்கத்திலை கீழை நிலத்திலை இருக்குது. எனக்கு என்ரை மனுசனிலை வந்த கோவம் சும்மா கொஞ்ச நஞ்சமில்லை.*

*எண்டாலும் வந்த கோவத்தை அப்பிடியே எனக்குள்ளையே அடக்கிப் போட்டன்.ஏனெண்டால் மனுசன் கதவையும் திறந்து வைச்சுக் கொண்டு நிக்குது. இப்ப போய் நான் என்ரை கோவத்தைக் காட்டுறன் எண்டு சொல்லிக் கத்த, எதிர் வீட்டுக்*

*காரர் சொல்லுவினம் "ஒரு அடக்கமில்லாத பொம்பிளை, என்னமா புருஷனைத் திட்டுது. கலிகாலம் முத்திப்போச்சு. பாவம் அந்த மனுசன்..." எண்டு.*

*அதுதான் சாறியை இழுத்து இடுப்பிலை சொருகிக் கொண்டு ஓடி ஓடி லைற்றை நிற்பாட்டி, தொலைக்காட்சியை நிற்பாட்டி, பேப்பரை மடிச்சு வைச்சு, கோப்பையையும் எடுத்து வைச்சிட்டு... மனுசனோடை மௌனமா நடந்து போறன்.*

*மனசுக்குள்ளை மட்டும் கோவம் ஆறாமல் இருக்குது. அது ஆரை என்ன செய்யப் போகுது!*

*-2001*

*ஈழமுரசு - பாரிஸ் (25-31 ஒக்டோபர் 2001)*
*ஐபிசி தமிழ் வானொலி - நங்கையர் நாழிகை (2001)*
*சக்தி - காலாண்டிதழ் (மே 2002)*

# கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா!

*‘**சொ**ல்லப் படாது. இந்த மனுசனுக்கு ஒண்டும் சொல்லப்படாது.‘ அப்பிடித்தான் எப்பவும் நினைக்கிறனான்.*

*ஆனாலும், எங்கை... சில நேரத்திலை பொறுமை கெட்டுப் போயிடுது. எத்தினைக் கெண்டு தான் நானும் பொறுமை காக்கிறுது! காலைமை எழும்பினதிலையிருந்து ஆற அமர நேரமில்லை. வேலை.*

*ம்... கூம், வேலை எண்டு மட்டும் இந்த மனுசன்ரை காது படச் சொல்லக் கூடாது. உடனை "என்னப்பா உனக்கு இஞ்சை வேலை? ஊரிலை மாதிரி என்ன இங்கையும் கல்லிலை அடிச்சு உடுப்புத் தோய்க்கிறியளோ..? ஆட்டுக்கல்லிலையும் அம்மியிலையும் அரைக்கிறியளோ..? அல்லது அடுப்பைத் தன்னும் பச்சை விறகை வைச்சிட்டு ஊதி ஊதி எரிக்கிறியளோ..? எண்டு பன்மையிலை கேட்கத் தொடங்கீடும்.*

*எனக்கு வரும் கோவம். ஊரிலை என்ன மிக்சி இல்லையோ? அல்லது எலெக்றிக் குக்கர்தான் இல்லையோ? வாய்க்கு வசதியாக ஏதும் சொல்லேலு மெண்டால் எதையும் சொல்லலாமெண்டு நினைக் குது இந்த மனுசன்.*

*நானும் சொல்லுறதெண்டால் சொல்லுவன்.*

*"நீங்கள் மட்டுமென்ன? ஊரிலை எண்டால் சைக்கிளைத்தான் தூக்கிக் கொண்டு வெளிக்கிடு வியள். இங்கை எண்டால் கார் இல்லையெண்டால் ஒரு அடி எடுத்து வைக்க மாட்டியள். அது மட்டுமே! விறகு கொத்துறது, தண்ணி அள்ளிக் கொண்டு வாறது... எண்டு எத்தினை வேலையள் அங்கை உங்களுக்கும்! இங்கை அப்பிடியே! சாமான்கள் வேண்டுற வேலையையும் பொம்பிளையளின்ரை தலையிலை போட்டிட்டு, நான் என்ரை மனுசிக்கு சுதந்திரம் குடுத்திருக்கிறன் எண்டுவியளே! உங்கடை சுதந்திரக் குடுப்பனவு பற்றி எங்களுக்குத் தெரியாதாக்கும். வேலைக்குப் போறதும் சாமான் வேண்டப் போறதும் தான் பெண் விடுதலைக்கான அர்த்தம் எண்டு நீங்களெல்லாருமா ஒரு அகராதியே தயாரிச்சு வைச்சிருக்கிறீங்களே!"*

*ம்... இதையெல்லாம் சொல்லுறதிலை ஏதும் பிரயோசனமிருக்கே! அதாலைதான் நான் எப்பவும் நினைக்கிறதோடை நிப்பாட்டிப் போடுவன். சொல்லுறேல்லை. சரி, அதை விட்டிட்டு இப்ப பிரச்சனைக்கு வருவம்.*

*நான் காலைமை எழும்பி வரவே போர்வை சோபாவிலை அப்பிடியே குழம்பின படி போட்டுக்*

*கிடக்கு. எனக்கு உடனையே எரிச்சல் வந்திட்டுது. நேற்றிரவு இந்த மனுசன்தான் போர்த்திக் கொண்டு படுத்திருந்து ரிவீ பார்த்துக் கொண்டிருந்தது. எழும்பிப் போகேக்கை போர்வையையும் எடுத்துக் கொண்டு போய் மடிச்சு வைக்கலாம் தானே. அதில்லை, அப்பிடியே போர்வையை விட்டிட்டுப் போய்ப் படுத்திட்டுது.*

*"ஏனப்பா நீங்கள் இன்னும் சின்னப் பிள்ளையே..? உங்களுக்கு எத்தினை தடவை சொல்லிப் போட்டன். இந்தப் போர்வையை எடுத்து வைச்சால் குறைஞ்சு போயிடுவிங்களே? நாவுற்றுக்குக் கழிச்ச மாதிரி ஏன் எப்பவும் கோலுக்குள்ளை போர்வையை வைக்கிறிங்கள்?" எண்டு கேட்க வந்த வார்த்தைகளை அப்பிடியே தொண்டையோடை நிப்பாட்டிப் போட்டன்:.*

*பிறகு மனுசன் சொல்லும் "விடியக் காத்தாலை தொடங்கீட்டாய் எண்டு." சும்மா சொன்னாலும் பரவாயில்லை. தன்ரை பிழையை மறைக்கிறேக்காண்டி நாய்க்கத்தல் கத்தத் தொடங்கீடும்.*

*எனக்கு அந்தக் கத்தலை கேட்கவே ஏலாது. எனக்கு மட்டும் என்ன விடியக் காத்தாலை இல்லையே! எனக்கும் விடியக் காத்தாலை இந்த மனுசன் அப்பிடிக் கத்தினால் மூட் அவுட்டாகும் தானே. ஆனால் மனுசன் நினைக்குது தனக்கு மட்டுந்தான் விடியக் காத்தாலை, வேலைக்களைப்பு, பஞ்சி, அலுப்பு... எல்லாம் இருக்கெண்டு. எனக்கும் இதெல்லாம் இருக்கெண்டு இந்த மனுசன் நினைச்சுப் பார்த்ததாவே தெரியேல்லை.*

*போர்வை மட்டுந்தான் பிரச்சினை யெண்டால் தூக்கி மடிச்சு வைச்சிட்டு இருந்திடுவன். எல்லா விசயத்திலையும் அப்பிடித்தான். பேப்பரை விரிச்சு வாசிச்சா மடிச்சு வைக்கிறேல்லை. புத்தகத்தை புத்தகஅலுமாரியிலையிருந்து எடுத்தால் திருப்பிக் கொண்டே வைக்கிறேல்லை... உப்பிடியே இந்த மனுசனும் பிறகு மனுசனைப் பார்த்து பிள்ளையளும் வீட்டிலை விதைச்சு விடுற சாமான்களெல்லாத்தையும் எடுத்து அந்தந்த இடத்திலை வைக்கவே எனக்கு ஒரு நாளிலை அரைவாசி போயிடும். அதுக்குள்ளை மனுசன் கேட்கும் "உனக்கென்ன வேலை..?" எண்டு.*

*காலைமை எழும்பினதிலையிருந்து வேலை எண்டெல்லே சொன்னனான். அதுதான் போர்வையை மடிச்சு வைக்கிறதிலை தொடங்கி ஒண்டொண்டா எல்லாத்தையும் அடுக்கி வைச்சு, சமைச்சு... மற்ற வேலையளையெல்லாம் முடிச்சு... நான் வேலைக்கு வெளிக்கிடக்கிளை அப்பிடியே வீடு 'பளிச்' செண்டு இருந்திச்சு. எனக்கு அதைப் பார்க்கவே ஒரு சந்தோஷம்.*

*அந்த சந்தோசத்தோடையே வேலைக்குப் போயிட்டன்.*

*வேலைக்குப் போனால் வேலை செய்யோணும் தானே. ஆனால் என்ரை மனுசன்ரை நினைப்பு, தான் மட்டுந்தான் வேலையிடத்திலை வேலை செய்யிறது. நான் எண்டால் சும்மா இருந்திட்டு வாறதெண்டு. சரி ஏதோ நினைச்சிட்டுப் போகட்டும். எனக்கு வேலை முடிஞ்சால் நிம்மதி. இனி வீட்டை போகலாமெண்டு.*

அப்பிடித்தான் வேலை முடிய நிம்மதியா வீட்டை வந்தன். அதையேன் பேசுவான். 'பளீச்' செண்டு நான் விட்டிட்டுப் போன வீடு என்னைப் பார்த்து இளிக்கிற மாதிரி... எல்லாம் தலை கீழாய். மேசையிலை புத்தகங்கள், பேப்பருகள், கடிதங்கள்... குசினிக்குள்ளை ஒரு குவியல் கோப்பையள்... கட்டிலுக்குப் பக்கத்திலை சுருட்டின படி மனுசன்ரை சொக்ஸ்...

மனுசன் சோபாக்குள்ளை சுருண்டபடி, அந்தப் போர்வையாலை போர்த்திக் கொண்டு பேசாமல் படுத்திருந்து ரீவீ பார்க்குது. மனுசனுக்கு வேலைக் களைப்பு., அதுதான்...

எனக்கு வந்துதே கோபமும் எரிச்சலும். கூட்டி, துடைச்சு, அடுக்கி வைக்கத்தான் முடியேல்லை. அடுக்கினதுகளையாவது குழப்பாமல் இருக்கலாம் தானே.

ஆனால் நான் ஒண்டுமே சொல்லேல்லை. மனசுக்குள்ளை குமைச்சலாத்தான் இருந்தது. ஆனாலும் பேசாமல் மனுசனுக்கு தேத்தண்ணியை போட்டுக் குடுத்திட்டு, தேத்தண்ணியை உடனை போட்டுக் குடுக்காட்டி மனுசன் பிறகு முஞ்சையை நீட்டிக் கொண்டு இருக்கும். எனக்கு இருக்கிற குமைச்சலும் எரிச்சலும் போதும். இன்னும் கூட்ட வேண்டாம் எண்டிட்டு அந்த வேலையை உடனை செய்திட்டு, பிள்ளையள் சாப்பிட்டுதுகளோ குடிச்சுதுகளோ எண்டு பார்த்து, இண்டைக்கு என்ன படிச்சது, வெளியிலை என்ன நடந்தது எல்லாம் கேட்டு முடிச்சிட்டு, பழையபடி அடுக்கல் கூட்டல் துடைத்தல்... எண்டு எல்லாம் முடிய பதினொரு

*மணியாச்சு. காலும் வேலை விட்டது போலை நோகத் தொடங்கீட்டுது. 'சரி, இனி இண்டைக்கு இதுக்கு மேலை ஒண்டும் செய்யேலாது, படுப்பம்' எண்டு நினைச்சுக் கொண்டு போனால் ரிவீ தன்ரை பாட்டிலை போய்க் கொண்டிருக்கு. அது மட்டுமே..! பழைய படி போர்வை சோபாவிலை...*

*மனுசன் நைசா அதை அப்பிடியே விட்டிட்டுப் போய்ப் படுத்திட்டுது போலை...*

*எனக்கு வந்துதே கோபம். விறுவிறென்று போய் படுக்கையறையைப் பார்த்தன். மனுசன் ஒய்யாரமாப் படுத்திருந்து புத்தகம் வாசிக்குது.*

*சொல்லப்படாது எண்டுதான் முதல்லை நினைச்சனான். ஆனால் என்னையறியாமல் பொறுமை கெட்டுச் சொல்லிப் போட்டன்.*

*"ஏனப்பா அந்தப் போர்வையை எடுத்து வைக்கிறதுக்கென்ன? எத்தினை தரமெண்டு உங்களுக்குச் சொல்லுறது?"*

*நான் இன்னும் சரியாச் சொல்லி முடிக் கேல்லை. அதுக்குள்ளை, மனுசன் இரவெண்டும் பாராமல் பொரிஞ்சு தள்ளிச்சே.*

*"நீ என்னத்துக்குப் பெண்டாட்டியெண்டு இருக்கிறாய்? எடுத்து வைக்கிறதுதானே! மனுசருக்கு இருக்கிற பிரச்சனையள் தெரியாமல்... உனக்கு இப்ப போர்வைதான் பிரச்சனையாக்கும்."*

*எனக்குத்தானே முதலே பொறுமை கெட்டிட்டு. நானும் விடேல்லை. "என்னப்பா*

*உங்களுக்கு அப்பிடிப் பெரிய பிரச்சனை?" எண்டு கேட்டிட்டன்.*

*'என்ன..! இவள் இப்பிடி பதில் சொல்லேலாத கேள்வியாப் பார்த்துக் கேக்கிறாளே!' எண்டு நினைச்சுதோ என்னவோ! மனுசனுக்கு வந்துதே ஒரு கோபம். அப்பிடியே முழுசி என்னை ஒரு பார்வை பார்த்திச்சு.*

*ஏதோ தான் பெரிய கௌசிக முனிவர். அவற்றை பார்வையிலை நான் எரிஞ்சு சாம்பலாயிடுவன் எண்ட நினைப்பு.*

*"என்னை என்ன,*
*கொக்கெண்டு நினைத்தாயோ கொங்கணவா?"*
*எண்டு கேக்கத்தான் எனக்கு மனம் வந்திச்சு.*

*ம்... பிறகேன் பிரச்சினையை வளர்ப்பான், எண்டிட்டு பேசாமல் வெளியிலை வந்திட்டன். மனுசன் நினைச்சிருக்கும் தன்ரை பார்வையிலை நான் பயந்திட்டனெண்டு.*

*-2002*

*ஈழமுரசு - பாரிஸ் (24-30 ஜனவரி 2002)*
*சக்தி - காலாண்டிதழ் (மே 2002)*
*ஐபிசி தமிழ் வானொலி - நங்கையர் நாழிகை (2002)*

# எனக்குத் தெரியும்!

*எனக்குத் தெரியும்! இப்ப பார்த்து இந்த மனுசன் கூப்பிடுமெண்டு.*

*கேட்காத மாதிரி இருந்துபோணும் எண்டு தான் நினைக்கிறனான். அதெங்கை, நினைக்கிறது மட்டுந்தான். மனுசன் கூப்பிட்டிச்சுதோ, என்னை யறியாமல் உடனை ஓமெண்டு போடுவன்.*

*என்ன..! பெரிய விசயத்துக்கொண்டும் இந்த மனுசன் கூப்பிடாது. பக்கத்திலை இருக்கிற புத்தகத்தை எழும்பி எடுக்கிற பஞ்சியிலை, வேலையா தூரத்திலை நிக்கிற என்னைக் கூப்பிட்டு "எடுத்துத் தா" எண்டு சொல்லும். எனக்குப் பொல்லாத கோவம் வரும்.*

*என்ரை கோவத்தைப் பற்றி மனுசனுக்கு அக்கறையே இல்லை.*

*இண்டைக்கு காலைமையிலை இருந்து பாக்கிறன். மனுசன் வேலைக்கும் போகாமல் வீட்டிலைதான் நிக்குது. ஒரு உதவி செய்து தருவம் எண்டில்லை. ரீவீயைப் போட்டிட்டு கதிரைக் குள்ளை இருந்து பாத்துக் கொண்டிருக்கு.*

அதுக்குள்ளை ஆயிரத்தெட்டுத் தரம் என்னைக் கூப்பிட்டு "அதை எடுத்துத் தா, இதை எடுத்துத் தா" எண்டு தொல்லை வேறை.

நான் நினைச்சனான், கொஞ்சம் எழுத்து வேலையள் இருக்கு இண்டைக்கு எப்பிடியாவது எழுதி முடிச்சுப் போடோணுமெண்டு. மனுசன் வேலைக்குப் போச்சுது எண்டால் ஒரு மாதிரி நினைச்சதிலை பாதியையாவது எழுதி முடிச்சுப் போடுவன். மனுசன் வீட்டிலை இருந்துதோ. ஒண்டும் நடக்காது. சுத்திச் சுத்தி சமைக்கிறதும் சாப்பிடுறதும், பாத்திரங்களைக் கழுவித் துடைச்சு குசினியைக் கிளீன் பண்ணுறதும் தான் வேலை யாயிருக்கும்.

சும்மா சொல்லக் கூடாது மனுசன் நல்லாச் சமைக்கும். ஆனால் மூட் வரோணும். 'மனுசன் வீட்டிலை நிக்குதுதானே இண்டைக்கு சமையல் பிரச்சனை இல்லை' எண்டு நான் நினைச்சால் அண்டைக்கு பாத்து மனுசன் போர்த்திக் கொண்டு படுத்திருந்து ரிவீ பார்க்கும்.

என்னதான் பெண் விடுதலை அது இதெண்டு கத்தினாலும் சில வேலையள் பொம்பிளையளுக் கெண்டு எழுதி வைச்சிருக்கு. மூட் இருக்கோ, இல்லையோ செய்து தான் ஆகோணும்.

"எனக்கு இண்டைக்கு சமைக்க மூட் இல்லை. பஞ்சியாயிருக்கு" எண்டு சொல்லிப் போட்டு ஒரு பொம்பிளை சமைக்காமல் போய் போர்த்திக் கொண்டு படுத்திருந்து ரிவீ பார்க்கேலுமே!

இப்பிடிக் கனக்க வேலையள் பொம்பிளை யளுக்கெண்டு எழுதி வைச்சிருக்கு.

அந்தக் காலத்திலை புருசன்மார் வேலைக்குப் போட்டு வர பெண்சாதிமார் வீட்டிலை இருந்து வீட்டு வேலையளைப் பார்த்தினம். இப்ப என்னடா எண்டால், பெண்சாதிமார் வேலைக்குப் போட்டு வந்து வீட்டு வேலையளையும் பார்க்கோணும்.

உதவி செய்யிற புருஷன்மாரும் இருக்கினை தான். இல்லையெண்டு நான் சொல்லேல்லை. ஆனால் அவையளுக்கு 'மூட்' இருந்தால் மட்டுந்தான். அதுவும் சில குறிப்பிட்ட வேலையளைத்தான்.

இப்ப இந்த மனுசன் இருக்கே. ருசியா சமைக்கும் தான். இல்லையெண்டு ஆர் சொன்னது.

ம்ம்... ருசியாச் சமைக்கலாம்தானே!

பஞ்சி கிஞ்சி ஒண்டும் இல்லையெண்டால் மட்டுந்தான் மனுசன் குசினிப் பக்கம் வரும். 'மூட்' டும் நல்லா இருக்கோணும்.

குசினிக்குள்ளை வந்துட்டுது எண்டால் பிறகு வீட்டிலை மற்றதுகளைப் பற்றி நினைக்கவே மாட்டுது. சமையலிலைதான் முழுக்கவனமும். அப்பிடியெண்டால் சுவையாச் சமைக்கலாம்தானே.

அதோடை என்னையும் சும்மா விடாது மனுசன். "அதை எடு. இதை எடு. அதை வெட்டு, இதைக் கழுவு..." எண்டு திப்பிலை ஆட்டிப்போடும்.

*அது மட்டுமே? அலுமாரியளுக்கை இருக்கிற பாத்திரங்கள் எல்லாம் வெளியிலை வந்திடும். அவளத்தையும் கழுவி, துடைச்சு வைக்க எனக்கு மனுசன் சமைச்ச நேரத்தைப் போல டபுள் மடங்கு நேரம் வேணும்.*

*பொம்பிளையளெண்டால் அப்பிடியே?!*

*பொம்பிளையளும் பஞ்சி கிஞ்சி இல்லாத நேரமா நல்ல மூட்டிலை இருக்கக்கை மட்டும் குசினிக் குள்ளை போச்சினம் எண்டால் வடிவாச் சுவையா சமைப்பினம் தானே. சமைச்சுக் கொண்டிருக்கக்கை வீட்டிலை இன்னும் எத்தினையை அவையள் கவனிக்கோணும். ஆம்பிளையள் நினைக்கினம். சமைக்கிறது மட்டுந்தான் வீட்டு வேலை எண்டு. அதை விட இன்னும் எத்தினை வேலையள் ஒரு வீட்டிலை இருக்கும்.*

*பிள்ளையள் படிக்குதுகளோ? சண்டை பிடிக்குதுகளோ? எண்டு பார்க்கோணும். குளிக்க வார்க்கோணும். பால் குடுக்கோணும். இல்லாட்டில் கிண்டர் கார்டன் முடியிற நேரம் வர ஓடிப் போய் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு வரோணும். உடுப்பு அயர்ண் பண்ணோணும். வீடு கிளீன் பண்ணோணும் எண்டு... இப்பிடிக் கனக்க விசயங்கள் பொம்பிளை யளின்ரை தலைக்குள்ளை இருக்கும்.*

*இதுக்குள்ளை சுவையாச் சமைக்கிறது ஆண்களா பெண்களா எண்டு ரேடியோவிலை பஞ்சாயத்து வேறை.*

*இந்த மனுசன் வீட்டிலை இருந்திச்செண்டால்*

சமைக்கிறனெண்டும் பாரமல் பதினெட்டுத்தரம் கூப்பிடும். சமைச்ச குறையிலை விட்டிட்டுப் போய் என்னெண்டு கேக்கோணும். கேட்டிட்டு குசினிக் குள்ளை திரும்பி வந்தால் கறிக்கு உப்பு போட்டனானோ இல்லையோ எண்டது மறந்து போடும்.

இதெல்லாம் ஆருக்கு விளங்கப் போகுது?

ஆம்பிளையளோ பொம்பிளையளோ சுவையாச் சமைப்பினை எண்டு ரேடியோவிலை விவாதம் நடக்கக்கை இந்த விசயத்தையெல்லாம் ரெலிபோன் பண்ணிச் சொல்லோணும் போலை எனக்கு ஒரு வேகம் வந்திச்சு. ஆனால் ஒரு சிலரை விட்டு மற்ற எல்லாரும் ஒட்டு மொத்தமா ஆம்பிளை யள் தான் சுவையா சமைப்பினம் எண்டு சொல்ல நிகழ்ச்சித் தயாரிப்பாளரும் வலு சந்தோஷமா அதை ஆமோதிச்சிட்டார். இதுக்குள்ளை பிறகு நான் என்னத்தைச் சொல்லுறதெண்டிட்டு விட்டிட்டன்.

இண்டைக்கு நான் வேலையாலை வரக்கை வழக்கம் போலை பஸ்சுக்குள்ளை கற்பனைச் சிறகை விரிச்சுக் கொண்டு வந்தனான். ஒரு சிறுகதை, ஒரு கவிதை இன்னும் துண்டு துண்டா கனக்க அழகிய கவிதைகள். வீட்டை வந்த உடனை அதுகளை எல்லாம் எழுதிப் போடோணும் எண்ட அவசரமும் அவாவும் எனக்குள்ளை.

இப்பிடி எத்தினை தரம் நடந்திட்டு. எண்டாலும் எனக்கு பேய் ஆசை. இண்டைக்கு எப்பிடியும் எழுதிப் போடலாம் எண்டு ஒரு

*சந்தோஷக் கிளுகிளுப்போடைதான் வீட்டுக்கு வந்தனான்.*

*ம்ம்ம்... எல்லாம் வீட்டை வந்து கதவைத் திறக்கிற வரைக்கும்தான்.*

*உள்ளை வந்த உடனை, வீடு தலைகீழாக் கிடக்கிற கோலத்தைப் பாத்ததும் எனக்குப் பத்திக் கொண்டு வந்திச்சு. பிறகு பிள்ளையள் ஆள் மாறி ஆளா ஏதோ எல்லாம் கேட்டுதுகள். அதுக்குள்ளை மனுசன் தேத்தண்ணிக்கும் சாப்பாட்டுக்கும் என்னைத்தான் காத்துக் கொண்டிருக்கு.*

*அம்மா வேலையாலை வந்திருக்கிறா ஒரு தேத்தண்ணி போட்டுக் குடுப்பம் எண்டு பிள்ளையளும் நினைக்கேல்லை. மனுசனும் நினைக்கேல்லை.*

*இந்தக் களபுளாவுக்குள்ளை என்ரை மனசுக்குள்ளை எழுதிக் கொண்டு வந்த கவிதையளிலையும் கதையிலையும் அரைவாசிக்கு மேலை அழிஞ்சிட்டு.*

*எல்லா வேலையளையும் முடிச்சுட்டு நினைவுக்குள்ளை இருந்த மிச்ச சொச்சத்தை எல்லாம் ஒண்டாத் திரட்டி ஒரு கவிதையாக்குவம் எண்டு குந்தினன். குந்தக்கையே நினைச்சனான். வெண்ணெய் திரண்டு வாற போது தாளியை உடைக்கிற போலை என்ரை எண்ணங்கள் திரண்டு வரக்கை இந்த மனுசன் கூப்பிட்டு குழப்பும் எண்டு. நினைச்ச மாதிரியே மனுசன் கூப்பிட்டிட்டு.*

*"என்னப்பா..?"*

*"ரீ ஒண்டு போடு" சோபாவுக்குள்ளை படுத்திருந்த படி மனுசன் சொல்லுது.*

*ரீயை போட்டுக் குடுத்தாப் போலை எனக்கு கவிதை எழுதவே வரேல்லை.*

*நினைச்சு நினைச்சுப் பார்க்கிறன். ம்கூம் மறந்தே போயிட்டுது.*

*-2001*

*ஈழமுரசு - பாரீஸ் (2002)*
*ஐபிசி தமிழ் வானொலி - நங்கையர் நாழிகை (2002)*
*ஒரு பேப்பர் (18 ஜூன் - 01 ஜூலை 2003)*

# அப்ப... பிரச்சனை..!

இண்டைக்கு எப்பிடியாவது இந்தப் பிரச்சனையைப் பற்றி இவரோடை கதைச் சிடோணும். நேற்றே கதைச்சிருப்பன். ஆனால் நான் வேலையாலை வந்த நேரம் இவர் ஆரோடையோ தொலைபேசியிலை கதைச்சுக் கொண்டிருந்தார்.

கதைச்சு முடிஞ்சு வரட்டும் கதைப்பம் எண்டு நினைச்சுக் கொண்டு நான் என்ரை வேலையளைச் செய்து கொண்டிருந்தன்.

கதைச்சு முடிச்சிடோணும் எண்ட நினைப்பு மனசுக்கை இருந்ததாலையோ என்னவோ என்ரை வேலையள் சரியா ஓட மறுத்துக் கொண்டிருந்தன. தேத்தண்ணியைப் போட்டுக் குடுத்திட்டு ஏதோ ஒரு ஒட்டாத் தன்மையோடை கணினிக்குள் புகுந்து, குசினுக்குள் அடுக்கி...

ம்...கும். அவர் இன்னும் கதைச்சு முடியேல்லை. நீட்டிலை கதைச்சுக் கொண்டே இருந்தார். சரியாக் காது குடுத்துப் பார்த்தன். ஒவ்வொரு விசயத்தையும் இரண்டு மூண்டு தரமா அளந்து கொண்டிருந்தார். இதெல்லாம் தேவையோ எண்டு நினைக்கிற விசயங்களையும் கதைச்சுக் கொண்டிருந்தார். பெண்களைக் கண்களா மதிக்கிற

*மாதிரியும் இடையிடையிலை கதைச்சு, எதிர் முனையிலை இருக்கிறவனிட்டை தன்னைப் பற்றிய இமேஜ்யை உயர்த்த முயற்சித்தார்.*

*அவற்றை கதை என்ரை காதிலை விழுறதையும் என்னாலை தவிர்க்க முடியேல்லை. நேரமும் பத்து மணியாகீட்டுது. பத்துமணி எண்டத்தான் நான் வேலையாலை வந்து இரண்டு மணித்தியாலங்கள் கரைஞ்சிட்டுது எண்டதும் உறைச்சுது.*

*சா… யன்னலுக்கு வெளியிலை ஒரே கும்மிருட்டு. வேலையிடத்திலை என்ரை தோழியர் "கோப்பி குடிக்கப் போவம் வா" எண்டு கேட்டவை. நான் "எனக்கு இண்டைக்குப் பஞ்சியா இருக்கு" எண்டு பொய் சொல்லிப் போட்டு வந்திட்டன். "லேற்றாப் போனால் இந்த மனுசன் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டிருக்கும்" எண்டு சொன்னால் அதுகள் "ஏன் உன்ரை மனுசன் உன்னை வீட்டிலை தனிய விட்டிட்டு எத்தினை தரம் எங்கையோ எல்லாம் சுத்திப் போட்டு வந்தவன்" எண்டு சொல்லிப் பேசுங்கள்.*

*பேசாமல் அதுகளோடை போய் நாலு கதை கதைச்சு மனம் விட்டுச் சிரிச்சிட்டு வந்திருக்கலாம்.*

*மனுசன் விட்ட பாடில்லை. தொலைபேசி யிலை அளந்து கொண்டே இருந்திச்சு. மூன்று மணித்தியாலமா நானும் உம்மாண்டி மாதிரி முட்டு வீட்டுக்குள்ளை தட்டுப் பட்டுக் கொண்டு திரிஞ்சன். அதுக்குப் பிறகு தான் மனுசன் ஒரு மாதிரி*

*தொலைபேசியை வைச்சிது. ஆனால் நேரந்தான் பதினொரு மணியாகீட்டுது. அப்பப் போய் இந்தப் பிரச்சனையைக் கதைக்கேலாது. அவ்வளவு அவசரமா கதைச்சு முடிக்கிற விசயமுமில்லை இது. அதோடை அப்ப போய் நான் ஏதாவது கதைக்க மனுசன் "படுக்கிற நேரம் பிரச்சனையான கதையளைக் கதைக்காதை" எண்டு சினக்க... வேண்டாம். நாளைக்குக் கதைப்பம் எண்டு விட்டிட்டன்.*

*அதுதான் இண்டைக்காவது எப்பிடியாவது கதைச்சிடோணும் எண்ட நினைப்போடே பிள்ளையாரே..! கடவுளே..! இண்டைக்கு ஒருத்தரும் ரெலிபோன் பண்ணியிருக்கக் கூடாது எண்டு நினைச்சுக் கொண்டு கதவைத் திறந்தன். நல்ல காலம் ஒரு கதைச் சத்தமும் கேட்கேல்லை.*

*அந்தப் பெரிய சந்தோசம் ஒரு சின்ன செக்கனுக்குள்ளை ஓடிட்டுது. தொலைக்காட்சி யிலை காற்பந்தாட்டம் நடக்குது. மெதுவா எட்டிப் பார்த்தன். மனுசனுக்கு என்ரை பக்கம் திரும்பக் கூட மனமில்லை. கண்களை தொலைக்காட்சிக்குள்ளை துலைச்சுப் போட்டு சோபாக்குள்ளை சுருண்டு கிடக்குது.*

*சரி, வழக்கம் போலை தேத்தண்ணியைப் போட்டுக் குடுத்திட்டு தொலைக்காட்சியைப் பார்த்தன். விளையாட்டுத் தொடங்கி ஆகப் பத்து நிமிசங்கள்தான். சா... விளையாட்டு முறைப்படி முடியிறதெண்டாலே எண்பது நிமிசங்கள் இன்னும் வேணும். இதுக்குள்ளை எத்தினை அளாப்பல்.*

*குழப்பல். பிறகு இடைவேளை. இதுகளோடை தேத்தண்ணியை கை நீட்டி வாங்க மறந்து தொலைக்காட்சியோடை இருக்கிற மனுசன். இண்டைக்கும் கதைக்கிறதெங்கை!*

*வெளியிலை பார்த்தன். கும்மிருட்டு. என்ரை அறை லைற்றை போட்ட படி விட்டிட்டு அப்பிடியே படுத்தன். ஆ... என்ன சுகம். கதகதப்பான போர்வை. அறை நிறைய வெளிச்சம். இதமான தலையணை. கண்ணைத் திறந்த படி ஏகாந்தம்.*

*அப்ப... பிரச்சனை..? அது என்ன எண்டுதானே கேக்கிறிங்கள். எனக்குத் தெரியும். ஊர்த் தொளவாரம் எண்டால் ஓடி வந்திடுவிங்கள் எண்டு. உங்கடை வீட்டுக்கையும் ஆயிரத்தெட்டுப் பிரச்சனையள் இருக்கும். அதை முதல்லை என்னெண்டு பாருங்கோ.*

– *2002*

*ஈழமுரசு – பாரிஸ் (2002)*
*ஐபிசி தமிழ் வானொலி – நங்கையர் நாழிகை (2002)*
*ஒரு பேப்பர் (18 ஜூன் – 01 ஜூலை 2003)*

# ஏன் தான் பெண்ணாய்..!

எனக்கு ஒண்டுமே பிடிக்கேல்லை. எல்லாரிலையும் கோபம் கோபமா வருது.

எதுக்கெடுத்தாலும் பொம்பிளைப் பிள்ளை நீ எண்டு கொண்டு..! ஏன்தான் இப்பிடிப் பொம்பிளைப் பிள்ளையாப் பிறந்தனோ..!

ஞாயிற்றுக் கிழமை எண்டால் எல்லாரும் எவ்வளவு சந்தோசப் படுவினம். எனக்கு மட்டும் ஞாயிறுகள் எல்லாம் ஏன்தான் வருதோ எண்டிருக்கு.

பின்னை என்ன..! ஞாயிறு எண்டு சொல்லி என்னைப் படுக்கக் கூட விடமாட்டுதுகளாம். பொம்பிளைப் பிள்ளை இப்பிடி வெய்யில் படு மட்டும் நித்திரை கொள்ளுறதோ..! எண்டு அப்பா சத்தம் போட்டு எழுப்பிப் போட்டார்.

இந்த அப்பா எப்பவும் இப்பிடித்தான். அம்மாவும் அப்பா சொல்லுறதுக்கு மறுத்து ஒண்டும் சொல்லமாட்டா.

*அம்மா சொல்லலாம் தானே "அவளை ஏனப்பா எழுப்பிறீங்கள். ஞாயிற்றுக்கிழமைதானே கொஞ்சம் படுக்கட்டுமன் விடுங்கோ" எண்டு..! அதில்லை, அப்பா ஊதுற சங்கை தான் இன்னும் கொஞ்சம் பெலத்தா ஊதுறதுதான் தனக்கு அழகு எண்டு நினைக்கிறா அம்மா. நான் என்ன செய்யிறது..?*

*என்ரை வகுப்புப் பிள்ளையளெல்லாம் சொல்லுங்கள், தாங்கள் ஞாயிற்றுக் கிழமையிலை பன்ரண்டு மணிமட்டும் நித்திரை கொண்ட கதையளையும் இரண்டு மணி மட்டும் நித்திரை கொண்ட கதையளையும். அதையெல்லாம் கேக்க எனக்குப் பொறாமையா இருக்கும். எனக்கு அதுகளைப் போல நீண்ட நித்திரைக்கெல்லாம் வழியே இல்லை.*

*எனக்குப் பார்த்தால் சில வேளை அம்மாக்கே ஞாயிறிலை கன நேரம் நித்திரை கொள்ள ஆசை இருக்கிற போலை தெரியும். ஆனால் அப்பா விடியக் காத்தாலை கண்ணை முழிச்சிடுவார். அவருக்கு தேத்தண்ணி குடிக்கிறதுக்கு அம்மா வேணும். ஒரு தேத்தண்ணி போடுறது பெரிய வேலையே. எழும்பிப் போய் போட்டுக் குடிக்கிறதுதானே. ஒரு தேத்தண்ணிக்காண்டி அம்மான்ரை நித்திரையைக் குழப்பி எழுப்போணுமே. ஆனாலும் எழுப்பிப் போடுவார். அம்மா பெட்(Bed) தேத்தண்ணி குடுத்தாப் போலைதான் அவர் படுக்கையை விட்டு எழும்புவார்.*

*இந்த பெட்-கோப்பி, பெட்-ரீ எல்லாம் வெளி*

*நாட்டு ஸ்ரைலிலை நடக்கும். அந்த ஸ்ரைலும் அப்பாக்கு மட்டும்தான். எழும்பி பல்லைத் தீட்டி முகத்தைக் கழுவிப் போட்டு தேத்தண்ணியைக் குடிக்கலாம்தானே! கேட்கத்தான் மனம் வரும். ம்..கும் பிறகு நான் கேட்கப் போக அப்பா கத்த பிறகு அம்மா கத்த... ஏன் அந்த களேபரமெல்லாம்!*

*அந்தக் களேபரத்தோடை என்ரை பிரச்சனை தீர்ந்திடுமெண்டாலும் பரவாயில்லை. அப்பா பிடிச்ச முயலுக்கு எப்பவும் மூண்டு கால்தான். அதை ஓமெண்டு சொல்லிச் சொல்லியே அம்மாக்கும் பழகீட்டுது. அதுக்காண்டி நானும் ஓமெண்டேலுமே!*

*நித்திரை மட்டும் தான் பிரச்சனை எண்டால் பரவாயில்லை. ஞாயிற்றுக் கிழமை எண்டாலே நாள் முழுக்க நான் இந்த வீட்டுக்குள்ளைதான் அடைஞ்சு போய்க் கிடக்கோணும். அண்ணா, தம்பி ரண்டு பேரும் எவ்வளவு நேரம் வேணுமெண்டாலும் மூசி மூசி நித்திரை கொண்டிட்டு எழும்புவாங்கள். பிறகு சாப்பிட்டிட்டு ஊர் சுத்தப் போடுவாங்கள்.*

*நான் மட்டும் இங்கை தனிய இருந்து எப்பவும் இந்த ரீவீ யைப் பார்த்துக் கொண்டு... எனக்கு அப்பாவிலை சரியான கோபம் கோபமாய் வருது.*

*அம்மாவாவது சில நேரம், சிலதுக்கு அநுமதிப்பா. ஆனால் அவவும் சமயம் வாற போது அப்பான்ரை பக்கம் சாய்ஞ்சிடுவா.*

*இண்டைக்கு மிகைலாவின்ரை பிறந்தநாள்.*

*ஆறு மணியிலை இருந்து பத்து மணி வரை பார்ட்டி. என்ரை வகுப்புப் பிள்ளையள் எல்லாரும் போவினம்.*

*"அதென்ன இரவிலை பார்ட்டி! நாங்கள் யேர்மனியிலை வாழ்ந்தாலும் சிறீலங்கன்ஸ்தான். அதை மறந்திடாதை" எண்டு அப்பா கோவமாச் சொல்லித் தடுத்துப் போட்டு குசினிக்குள்ளை போய் அம்மாட்டை "இஞ்சை பாரும். இப்பிடி பார்ட்டி அது இதெண்டு போய்த்தான் பிள்ளையள் கெட்டுப் போறதுகள். அவளுக்குச் சொல்லி வையும். இனி இப்பிடியான விசயங்களுக்குப் போகப்போறன் எண்டு என்னைக் கேட்கக் கூடாதெண்டு" எண்டு கத்துறார். எனக்கு அழோணும் போலை இருந்திச்சு.*

*நான் அழுதாலும் இவையளுக்கொண்டும் பிரச்சனையில்லை. அம்மாவைப் பார்த்தால் சிலவேளை எனக்காண்டிக் கவலைப் படுறா போலை இருக்கும். ஆனால் ஒண்டும் சொல்ல மாட்டா.*

*ஏதோ வெளிநாட்டுக் காரர் பிள்ளையளை வளர்க்கிறது சரியில்லை எண்ட மாதிரி என்ரை அப்பா, அம்மா, அவையளின்ரை சினேகிதர்கள் எல்லாரும் சேர்ந்து கதைப்பினம். ஆனால் உண்மையிலை வெளிநாட்டுக்காரர் தான் பிள்ளையளின்ரை மனஉணர்வுகளுக்கு மதிப்புக் குடுத்து வளர்க்கினம் எண்டது இவையளுக்குத் தெரியேல்லை. இதுகளை நான் சொல்லப் போனால் இவையள் கேட்பினமே!*

*ஒரு பதினாலு வயசுப் பிள்ளைக்கு எத்தினை ஆசையள் இருக்கும். என்ரை வயசுப் பிள்ளைய*

ளெல்லாம் எவ்வளவு சந்தோஷமா எங்கையெல்லாம் சுத்திக் கொண்டு திரியுதுகள்.

நான் மட்டும் இப்பிடி வீட்டுக்குள்ளை அடைஞ்சு போய்க் கிடக்கோணும் எண்டு இவையள் நினைக்கிறது சரியோ...!

என்னெண்டு நான் இதையெல்லாம் இவை யளுக்கு விளங்கப் படுத்துறதோ தெரியேல்லை.

வெளியிலை போனால் இப்ப என்ன வந்திட்டுது. அண்ணா, தம்பியவையள் மட்டும் நல்ல ஹாயா எங்கையோ எல்லாம் சுத்திப் போட்டு வருவினம். அதுக்கு அம்மாவும் அப்பாவும் ஒண்டுமே சொல்லமாட்டினம். ஏனெண்டால் அவையள் ஆம்பிளைப் பிள்ளையளாம்.

அவையள் சுத்திப் போட்டு வந்து "ஒரு தேத்தண்ணி போடு" எண்டுவினை.

"ஏன் நீயே போட்டுக் குடியன்" எண்டு சொல்லத்தான் எனக்கு மனம் வரும். அதுக்கிடையிலை அம்மாவே சொல்லிப் போடுவா "பிள்ளை அவனுக்கு அந்த வடையையும் எடுத்துக் குடு" எண்டு.

ஏன் ஆம்பிளைப் பிள்ளையளுக்கு கைகால் ஒண்டும் இல்லையோ...! ஏன் நான் எடுத்துக் குடுக்கோணும்...!

இதையெல்லாம் கேட்கேணும் போலை

*இருக்கும். என்னெண்டு கேட்கிறது...!*

*அவங்களும் லேசில்லை. சும்மா புதுமை கதைப்பாங்கள். சேர்ட்டை மாத்துற மாதிரி அடிக்கடி கேர்ள் பிரண்டையும் மாத்துவாங்கள். தாங்கள் வெளிநாட்டுப் பெட்டையளோடை உதட்டோடை உதடு உரசி அன்பைப் பரிமாறுறது ஒண்டும் தப்பில்லையாம். ஆனால் தங்கடை சகோதரி மட்டும் பெடியங்களைக் கண்டால் சிரிப்பைக் கூட அளந்துதான் உதிர்க்கோணுமாம். அது மட்டுமே! தங்களுக்கு மனைவியா வரப் போறவள் பயங்கர சுத்தமா இருக்கோணுமாம். எப்பிடியிருக்கு இவையளின்ரை நியாயங்கள்.*

*இதுகளைப் பற்றி நான் மூச்சே விடக் கூடாதாம். ஏனெண்டால் அம்மா அப்பாவும் அண்ணாவையளின்ரை கொள்கையளுக்கு நல்ல சப்போர்ட்.*

*அம்மாவோடை சாடை மாடையா இதைப் பற்றி ஒரு நாள் கதைச்சுப் பார்த்தன். அவை ஆம்பிளைப் பிள்ளையளாம். அம்மா சொல்லி அந்த சப்டரையே என்னைத் தொடர விடாமல் குளோஸ் பண்ணீட்டா.*

*அம்மாவாலை என்னெண்டு தான் இப்பிடி எல்லாம் வாழ முடியுதோ! எனக்கெண்டால் தெரியேல்லை.*

*வாற கோபத்துக்கு எல்லாருக்கும் ஏதாலும் சொல்லோணும் போலை கிடக்கு.*

*என்னெண்டு சொல்லுறது...! உடனை அப்பா கத்துவார். "உப்பிடி வாய் காட்டிப் பழகாதை. பொம்பிளைப்பிள்ளை மாதிரியே வளர்ந்திருக்கிறாய்" எண்டு.*

*அது மட்டுமே...! பிறகு அம்மாவோடையும் கத்துவார். "நல்ல வளர்ப்புத்தான் வளர்த்து வைச்சிருக்கிறீர்" எண்டு.*

*எனக்கு ஒண்டு விளங்கேல்லை. ஏன் பொம்பிளையள் ஏதும் கதைச்சால் அதை வாய் காட்டுறது எண்டு சொல்லோணும். என்ரை கருத்தை நான் சொல்லுறதுக்கு எனக்கு உரிமை இல்லையே! எனக்கு எல்லாரையும் விட அப்பாவிலைதான் பயங்கரக் கோவம். அப்பாவைக் கூப்பிட்டு இதையெல்லாம் கேக்கோணும் எண்டு இருக்கும்.*

*ஏதோ சனநாயகம், சர்வாதிகாரம்... எண்டெல்லாம் பெரிய அரசியல் கதைப்பார் அப்பா. இது கூட ஒரு வித சர்வாதிகாரம்தானே!*

*என்னை யேர்மன் ஸ்ரைலிலை பிறந்தநாள் விழாவுக்குப் போகவேண்டாமெண்டு சொல்லிப் போட்டு தான் மட்டும் வெளிநாட்டு ஸ்ரைலிலை மேசையிலை போத்தலுகளும் கிளாசுகளுமா வைச்சுக் கொண்டிருந்து தன்ரை சினேகிதர்களோடை குடிச்சுக் கொண்டிருக்கிறார்.*

*எனக்கு ஒரே எரிச்சலும் கோபமும்தான் வருது. எவ்வளவு நேரத்துக்கெண்டு இந்த ரீவீயைப் (தொலைக்காட்சி) பார்த்துக் கொண்டிருக்கிறது!*

*அதுவும் அப்பாக்கும் அவற்றை சினேகிதருக்கும் பிடிச்ச நிகழ்ச்சியளை மட்டும்.*

*அம்மா ரேஸ்ருக்கு (Taste) க்கு ‘ரோல்ஸ்‘ செய்து அப்பாவைக்குக் குடுத்திட்டு இடியப்பமும் அவிச்சு, கறி, பொரியல் சொதி எல்லாம் செய்திட்டா.*

*அப்பாவையள் ரோல்ஸ்ஸை சாப்பிட்டு முடிச்சிட்டினம். அதாலை ரேஸ்ருக்கு (Taste) க்கு இன்னும் ஏதாவது வேணுமாம். அப்பா வந்து அம்மான்ரை காதுக்குள்ளை குசுகுசுத்துப் போட்டுப் போறார்.*

*அம்மா களைச்சுப் போட்டா எண்டுறது எனக்குத் தெரியுது. ஆனாலும் அம்மா முடிக்கி விட்ட பொம்மை மாதிரி வாயை மூடிக் கொண்டு ‘கட்லட்‘ செய்ய ஆயுத்தப் படுத்துறா. என்னைக் கூப்பிட்டு வெங்காயம் வெட்டித் தரச் சொல்லுறா.*

*எனக்கு அம்மாவோடை கதைக்கக் கூடப் பிடிக்கேல்லை.*

*நாளைக்கு, பள்ளிக்கூடத்திலை என்ரை பிரண்ட்ஸ் (Friends) எல்லாரும் கேட்பினம் "ஏன் நீ பேர்த்டே பார்ட்டிக்கு வரேல்லை" எண்டு. என்னாவது பொய் சொல்லோணும். அதுகளுக்கு இப்ப என்ரை நிலைமை ஓரளவு விளங்கீட்டுது. "துருக்கி அப்பாமார் மாதிரி உன்ரை அப்பாவும் பொல்லாதவரே? உன்னை ஒரு இடமும் விடமாட்டாரே?" எண்டு அண்டைக்கு ஸ்ரெபி*

*கேட்டவள். எனக்கு எவ்வளவு வெக்கமா இருந்ததெண்டு இந்த அம்மாக்கோ அப்பாக்கோ தெரியுமே?*

*இதுக்குள்ளை பிறகு அம்மா சொல்லுறா "பிள்ளை இந்தக் கோப்பையளைக் கழுவு" எண்டு.*

*மாட்டன் எண்டு சொல்லோணும் போலை பயங்கரக் கோவம் எனக்கு வருது. ஆனால் என்னெண்டு சொல்லுறது. பேசாமல் கோப்பை யளோடை சேர்த்து என்ரை ஆசையளையும் கழுவிக் கொண்டிருக்கிறன்.*

*-2001*

*ஈழமுரசு - பாரிஸ் (25-31 ஒக்டோபர் 2001)*
*ஐபிசி தமிழ் வானொலி-நங்கையர் நாழிகை (Sep 2002)*
*சக்தி - காலாண்டிதழ் (மே 2002)*

*ஒரு எழுத்து எங்காவது ஒரு மூலையில் இருக்கும் ஒருவரையாவது அசைக்குமாயின் அதுவே அந்த எழுத்துக்குக் கிடைத்த பெரு வெற்றியாகும்.*

*அப்படி ஒருவரையல்ல பலரையும் அசைத்த எனது எழுத்துக்களிலிருந்து ஐந்தைத் தேர்ந்தெடுத்து இங்கு தொகுத்துள்ளேன்.*

*இவை 2001-2002 காலப்பகுதியில் 'பெண் மனசு' என்ற தலைப்பில் ஐபிசி தமிழ் வானொலியில் ஒலித்தவை. பாரிஸ் ஈழமுரசிலும் சக்தி பெண்கள் இதழிலும் பிரசுரமானவை. மீண்டும் மீண்டுமாய் வேறு பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் மறுபிரசுரமும் வானொலிகளில் மறுஒலிபரப்பும் செய்யப் பெற்றவை. இவை அப்படி ஒலித்த, பிரசுரமான அந்தக் காலகட்டத்தில் "எங்கள் வீட்டுக் கதையை அப்படியே எழுதியிருக்கிறீங்கள்... எங்கள் வீட்டுக் கதை எப்படி உங்களுக்குத் தெரிய வந்தது? எங்கள் வீட்டுக்குள் எட்டிப் பார்த்தீங்களா..?" என்றெல்லாம் என்னைக் கேட்டவர்கள் பெண்கள் மட்டுமல்ல. ஆண்களும் தான்.*

*படித்துப் பாருங்கள். ஒருவேளை உங்களுக்கும் பிடிக்கலாம். ஏன், உங்கள் வீட்டுக் கதையாகக் கூட இருக்கலாம்.*

***சந்திரவதனா செல்வகுமாரன்***

*MANAOSAI*
*Chandra Selvakumaran*
*chandra1200@gmail.com*

